
# ஓடிஓடி ஓடிஓடி உட்கலந்த ஜோதியை

ஓம் நமஸிவாய



சிவன் · சித்தர் பாடல் தொகுப்பு

ஓடி ஓடி ஓடி ஓடி உட்கலந்த ஜோதியை
நாடி நாடி நாடி நாடி நாட்களும் கழிந்துபோய்
வாடி வாடி வாடி வாடி மாண்டுபோன மாந்தர்கள்
கோடி கோடி கோடி கோடி எண்ணிறந்த கோடியே

(ஓம் நமசிவாய.....)

என்னிலே இருந்த ஒன்றையான் அறிந்ததில்லையே
என்னிலே இருந்த ஒன்றையான் அறிந்துகொண்டபின்
என்னிலே இருந்த ஒன்றையாவர் காணவல்லரோ
என்னிலே இருந்திருந்து யானுணர்ந்து கொண்டேனே

(ஓம் நமசிவாய.....)

நானதேது நீயதேது நடுவிலே நின்றதேதடா
கோனதேது குருவதேது கூறிடும் குலாமரே
ஆனதேது அழிவதேது அப்புறத்தில் அப்புறம்
ஈனதேது ராம ராம ராமவென்ற நாமமே

(ஓம் நமசிவாய.....)

அஞ்செழுத்திலே பிறந்து அஞ்செழுத்திலே வளர்ந்து
அஞ்செழுத்தை ஓதுகின்ற பஞ்சபூத பாவிகாள்
அஞ்செழுத்தில் ஓரெழுத்தை அறிந்துகூற வல்லிரேல்
அஞ்சலஞ்சல் என்றுநாதன் அம்பலத்தில் ஆடுமே

(ஓம் நமசிவாய.....)

இடது கண்கள் சந்திரன் வலது கண்கள் சூரியன்
இடக்கை சங்குச் சக்கரம் வலக்கை சூலமான்மழு
எடுத்தபாதம் நீண்முடி எண்டிசைக்கும் அப்புறம்
உடல்கலந்துநின்ற மாயம் யாவர்காண வல்லரோ
அஞ்சல் அஞ்சல் என்றுநாதன் அம்பலத்தில் ஆடுமே

(ஓம் நமசிவாய.....)

உருவுமல்ல வெளியுமல்ல ஒன்றைமேவி நின்றதல்ல
மருவுமல்ல கந்தமல்ல மந்திரங்கள் அல்லவே

பெரியதல்ல சிறியதல்ல பேசலானி தானுமல்ல
அரியதாகி நின்றநேர்மை யாவர்காண வல்லரோ

(ஓம் நமசிவாய.....)

மண்கலங்க விழ்ந்தபோது வைத்துவைத்து அடுக்குவார்
வெண்கலங் கவிழ்ந்தபோது வேணுமென்று பேணுவார்
நங்கலங் கவிழ்ந்தபோது நாறுமென்று போடுவார்
எண்கலந்து நின்றமாயம் என்ன மாயம் ஈசனே

(ஓம் நமசிவாய.....)

ஆன அஞ்செழுத்துளே அண்டமும் அகண்டமும்
ஆன அஞ்செழுத்துளே ஆதியான மூவரும்
ஆன அஞ்செழுத்துளே அகாரமும் மகாரமும்
ஆன அஞ்செழுத்துளே அடங்கலாவலுற்றதே

(ஓம் நமசிவாய.....)

நினைப்பதொன்று கண்டிலேன் நீயலாது வேறிலை
நினைப்புமாய் மறப்புமாய் நின்றமாயை மாய்கையை
அனைத்துமாய் அகண்டமாய் அனாதிமுன் அனாதியாய்
எனக்குள்நீ உனக்குள்நான் இருக்குமாறு எங்ஙனே

(ஓம் நமசிவாய.....)

பண்டுநான் பறித்தெறிந்த பன்மலர்கள் எத்தனை
பாழிலே செபித்துவிட்ட மந்திரங்கள் எத்தனை
மிண்டராய் திரிந்தபோது இறைத்தநீர்கள் எத்தனை
மீளவும் சிவாலயங்கள் சூழ்ந்துவந்த தெத்தனை

(ஓம் நமசிவாய.....)

அம்பலத்தை அம்புகொண்டு அசங்கென்றால் அசங்குமோ
கம்பமற்ற பாற்கடல் கலங்கென்றால் கலங்குமோ
இன்பமற்ற யோகியை இருளும்வந்து அணுகுமோ
செம்பொன் அம்பலத்துளே தெளிந்ததே சிவாயமே

(ஓம் நமசிவாய.....)

அவ்வென்னும் எழுத்தினால் அகண்டம் ஏழும் ஆகினாய்
உவ்வென்னும் எழுத்தினால் உருவு தரித்து நின்றனை
மவ்வென்னும் எழுத்தினால் மயங்கினார்கள் வையகம்
அவ்வும்உவ்வும் மவ்வுமாய் அமர்ந்ததே சிவாயமே

(ஓம் நமசிவாய.....)

மூன்று மண்டலத்திலும் முட்டிநின்ற தூணிலும்
நான்ற பாம்பின் வாயிலும் நவின்றெழுந்த அட்சரம்
ஈன்றதாயும் அப்பனும் எடுத்துரைத்த மந்திரம்
தோன்றுமோர் எழுத்துளே சொல்ல வேணுமில்லையே

(ஓம் நமசிவாய.....)

நமச்சிவாய அஞ்செழுத்தும் நல்குமே நிலைகளும்
நமச்சிவாய பஞ்சக்ஷரம் புராணமான மாய்கையை
நமச்சிவாய அஞ்செழுத்தும் நம்முளே இருக்கவே
நமச்சிவாய உண்மையை நன்குரை செய் நாதனே

(ஓம் நமசிவாய.....)

இல்லை இல்லை இல்லை என்று இயம்புகின்ற ஏழைகாள்
இல்லை என்று நின்றதொன்றை இல்லை என்னலாகுமோ
இல்லை அல்ல ஒன்றுமல்ல இரண்டுமொன்று நின்றதை
எல்லை கண்டு கொண்டபேர் இனிப்பிறப்பதில்லையே

(ஓம் நமசிவாய.....)

கார கார கார கார காவல் ஊழி காலவன்
போர போர போர போர போரில் நின்ற புண்ணியன்
மார மார மார மார மரங்கள் ஏழும் எய்தசீர்
ராம ராம ராம ராம என்னும் நாமமே

(ஓம் நமசிவாய.....)

விண்ணிலுள்ள தேவர்கள் அறியொணாத மெய்ப்பொருள்
கண்ணிலே அணிந்துள்ள கண்ணிலாத காட்சியான்
பண்ணினால் பிறப்பறுத்த பயன்கள் வைத்தபின்
அண்ணலோடு உம்முடனே அமர்ந்துவாழ வேண்டுமே

(ஓம் நமசிவாய.....)

அகாரமான தம்பலம் அனாதியான தம்பலம்
உகாரமான தம்பலம் உண்மையான தம்பலம்
மகாரமான தம்பலம் வடிவமான தம்பலம்
சிகாரமான தம்பலம் தெளிந்ததே சிவாயமே

(ஓம் நமசிவாய.....)

உண்மையான மந்திரம் ஒளியிலே இருந்திடும்
தன்மையான மந்திரம் சமைந்த ரூபமாகியே
வெண்மையான மந்திரம் விளைந்து நீறதானதே
உண்மையான மந்திரம் அதொன்றே சிவாயமே

(ஓம் நமசிவாய.....)

ஓம் நம சிவாயமே உணர்ந்தமெய் உணர்ந்தபின்
ஓம் நம சிவாயமே உணர்ந்தமெய் தெளிந்தபின்
ஓம் நம சிவாயமே உணர்ந்தமெய் உணர்ந்தபின்
ஓம் நம சிவாயமே உலகம்வந்து நிற்குமே

(ஓம் நமசிவாய.....)

ஓடி ஓடி ஓடி ஓடி உட்கலந்த ஜோதியை
நாடி நாடி நாடி நாடி நாட்களும் கழிந்துபோய்
வாடி வாடி வாடி வாடி மாண்டுபோன மாந்தர்கள்
கோடி கோடி கோடி கோடி எண்ணிறந்த கோடியே

(ஓம் நமசிவாய.....)